20th March 1963]

புதிய பஸ் ரூட்கள் (அறந்தாங்கி)

*302 கேள்வி.—திரு. ஆ. துரை அரசன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அறந்தாங்கி தாலூகாவில் புதிய பஸ் ரூட்களை ஏற்படுத்த உத்தேச முண்டா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, Sir.

திரு. ஆ. துரை அரசன் : அறந்தாங்கி வட்டத்திலே புதிய பஸ் ரூட்டு களை எந்தெந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்க வேண்டுமென்று கோரிக்கைகள் வந்துள்ளன.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பொதுவாக வந்த கோரிக்கைகள் டெவலப்மெண்ட் விங்கினால் பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனை செய்த தன் விளைவாக கீழ்க்கண்ட ரூட்கள் ரீஜனல் டிரான்ஸ்போர்ட் அதாரிட்டியின் பரிசீலனையில் இருக்கின்றன.

1. Thanjavur to Kottaipattinam (via) Aranthangi.

2. Thanjavur to Aranthangi (Express Bus Service).

3. Aranthangi to Kumbakonam (via) Pattukkottai, Madukkur, Mannargudi and Needamangalam.

4. Mimisal to Kumbakonam (via) Aranthangi, Kulavoipatti, Alangudi, Adanakottai, Gandharvakottai, Thirukkalar, Thanjavur, Ayyampet and Papanasam.

சென்னை நாகை எக்ஸ்பிரஸ் பஸ்

*303 கேள்வி.—திரு. பி. ஐயராஜ் : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து சீர்காழி, மாயூரம், சிதம்பரம், சன்னநல்லூர், நாகூர், வழியாக நாகைப்பட்டிணத்திற்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடுவதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் உண்டா ?

(இ) அப்படியானால், எப்போது விடப்படும் ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) & (இ) சென்னையிலிருந்து நாகப்பட்டிணத்துக்கு செங்கற்பட்டு, திண்டிவனம், புதுச்சேரி, கடலூர், சிதம்பரம், சீர்காழி, மாயூரம், தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர் வழியாக சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்து துறை எக்ஸ்பிரஸ் பஸ் விட உத்தேசித்துள்ளது. இதை அனுசரித்து, சென்னை அரசாங்க பஸ் போக்கு வரத்துத் துறை டைரக்டர் மோட்டார் வண்டிச் சட்டம், 1939-ன் (Chapter IV-A) அத்தியாயத்தின்கீழ் திட்டம் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந்த மார்க்கம் புதுச்சேரி மாநிலம் வழியாகச் செல்வதால், இந்திய அரசினரின் சம்மதத்தைக் கேட்டுள்ளோம். அவர்கள் இசைவு தந்து, டைரக்டர் வெளியிட்டுள்ள இத் திட்டம் ஏற்கப்பட்டால், சென்னை அரசாங்க பஸ் போக்குவரத்துத் துறையினர் இந்த மார்க்கத்தில் பஸ் விடுவர்.

திரு. ஆ. துரை அரசன் : அதிராமபட்டினத்திலிருந்து அறந்தாங்கி வழி யாக மதுரைக்கு எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : கோரிக்கைகள் நிறைய வந்திருக் கின்றன. அதில் இதுவும் ஒன்று என்பது தெரியாது.

திரு. எம். டி. தியாகராஜ பிள்ளை : இப்பொழுது போகின்ற பஸ் தஞ்சை ஜில்லாவின் கீழ் பகுதியில் போவதால், கேள்வியில் குறிப்பிட்ட படி மாயூரம், நாகூர் வழியாகச் சென்றால், சௌகரியமாக இருக்கும். ஆகவே அவ்வாறு செல்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது புதிதாகப் போடப் பட்டிருக்கிற பஸ் மாயூரம், தரங்கம்பாடி, காரைக்கால், நாகூர் வழியாகத் தான் போகிறது.

திரு. ஆ. கு. சுப்பைய்யா : பட்டுக்கோட்டையிலிருந்து திருத்துறைப் பூண்டி, திருவாரூர், நன்னிலம், மாயூரம், வழியாக சென்னைக்கு பஸ் விடுவதற்கு அரசாங்கம் ஆலோசிக்குமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இப்பொழுது அது ஆலோசனையில் இல்லை.

திரு. கி. இரா. சம்பந்தம் : மாயூரம், கும்பகோணம், தஞ்சாவூர், திருச்சி, மதுரை, இந்த மார்க்கமாக கவர்ன்மெண்ட் டிரான்ஸ்போர்ட் எக்ஸ்பிரஸ் பஸ் விடவேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா ? அப்படி யிருந்தால், அதன் மீது எடுக்கப்பட்ட முடிவு என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பல கோரிக்கைகள் வந்திருக் கின்றன. என்னென்ன கோரிக்கைகள் வந்திருக்கின்றன என்பது ஞாபகம் இல்லை. ஆனால் அந்த விதமான முடிவு இப்பொழுது இல்லை.

திரு. ஆ. துரை அரசன் : சென்னையிலிருந்து தினம் புறப்படுகிற பஸ்கள் திருச்சி, தஞ்சையோடு நின்றுவிடுகின்றன. அதிலே ஏதாவது ஒரு பஸ்ஸை புதுக்கோட்டை வரை விஸ்தரிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பஸ் போக்குவரத்து அமைப்பதில் பல விதிகளை அனுஷ்டிக்க வேண்டியிருக்கிறது. முக்கியமாக, தொழி லாளர்களுக்கு 8 மணி நேரம் வேலை, நடுவிலே ஓய்வு எல்லாவற்றையும் பார்த்துச் செய்ய வேண்டும். அதையெல்லாம் பார்த்து, சென்னையிலிருந்து திருச்சி வரை ஒரு கட்டம், திருச்சியிலிருந்து மற்ற இடங்களுக்கு வேறு பஸ்கள் விடுவது என்று ஏற்பாடு செய்திருக்கிறோம்.

திரு. சா. ராமசாமி : தஞ்சையிலிருந்து சென்னைக்கு வரும் பஸ்கள் குடந்தை, அணைக்கரை, விருத்தாசலம் வழியாகச் செல்லுகின்றன. ஜெயங் கொண்டம் வழியாக வந்தால் சௌகரியமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : ஜெயங்கொண்டம் மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆனால் மற்ற பகுதியிலுள்ள மக்களுக்கு வசதிக் குறைவாக இருக்கும். புதிதாக பஸ்கள் விடவேண்டுமா என்று யோசனை செய்யலாமே ஒழிய, ஓடிக்கொண்டிருக்கிற மார்க்கத்தை மாற்றுவது சரி யல்ல.

திரு. டி. கார்ச்சா கவுடர் : உதகையிலிருந்து மதுரைக்கு ஒரு எக்ஸ் பிரஸ் பஸ் விட்டிருக்கிறார்கள். அதற்கு என்னுடைய நன்றி. உதகையி லிருந்து சேலத்திற்கும், உதகையிலிருந்து திருச்சிக்கும் எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடவேண்டுமென்று கோரிக்கைகள் வந்திருக்கின்றனவா ? அப்படியானால் அவற்றின் நிலைமை என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இரண்டு மூன்று கோரிக்கை களில் ஒன்று பூர்த்தியாகிவிட்டது. இன்னும் கொஞ்சம் பொறுத்திருந்தால் மற்ற கோரிக்கைகளும் பூர்த்தியாகும்.

திரு. கோ. சி. மணி : தஞ்சையிலிருந்து புறப்பட்டு பாண்டி வழியாக சென்னைக்கு மூன்று பஸ்கள் வந்துகொண்டிருக்கின்றன. அதிலே ஒரு பஸ்ஸை மாயூரம், சீர்காழி வழியாக விடுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?